15.6.2026

அ.வ.எண்.42/2024

வா.சா.2 செங்கோட்டையன் த/பெ. சுக்ரியப்பன்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு வாதி மற்றும் பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். எனக்கு பிரதிவாதியை 4 முதல் 5 ஆண்டுகளாக தெரியும். பணம் வெண்ணந்தூரில் உள்ள வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது.பணத்தை ரொக்கமாக தான் கொடுத்தார்கள். எத்தனை ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. பணத்தை நான் எண்ணி பார்க்கவில்லை என்றால் சரிதான். எத்தனை நோட்டுக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிராமசரி நோட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2023ம் ஆண்டு 3வது மாதம் 10ம் தேதியில் சாட்சி கையொப்பம் செய்தேன். என் முன்னிலையில் தான் பிரதிவாதி கையொப்பம் செய்தாரா என்றால் என் முன்னால் தான் செய்தார். எனக்கு பணம் கொடுத்தது மற்றும் வாங்கியது பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி கையொப்பம் செய்த வெற்று புரோநோட்டை பயன்படுத்தி வாதியுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- S. செங்கோட்டையன்

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.